IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.270/2018 P.W. 8/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுரேஷ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜேந்திரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 28.07.2018ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் காட்டாத்துறை அருகே வைத்து போலீசார் சம்பவம் இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து சம்பவம் குறித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் சேகர் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் டிரைவராக உள்ளேன். காலையில் தினமும் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வேன் என்றால் காலை 06.30 மணியளவில் வேலைக்கு செல்வேன். நான் எங்கு செல்வதற்காக சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தேன் என்றால் வேலைக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தேன். என்னிடம் என்ன நிலை காவலர் கையொப்பம் வாங்கினார் என்றால் காவலர் கையொப்பம் வாங்கீனார்கள் அவர் என்ன நிலை என்று எனக்கு தெரியாது எத்தனை பேப்பரில் கையொப்பம் வாங்கீனார்கள் என்றால் 1 பேப்பரில்

கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்து என்னை விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் இடம் செல்லவில்லை என்றாலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும்சரியல்ல. அ.சா.1 விஷ்ணு எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram (FAC)